## தலைப்பு 215 - தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிப்பு திணைக்களம்

---

## 1 நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிப்பு திணைக்களத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றைக் கொண்டமைந்த 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154 (1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிப்பு திணைக்களத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2021 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தில் 11(2) பிரிவு பிரகாரம் திணைக்களத்திற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆந் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிப்பு திணைக்களத்தின் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.6 பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38(1)(இ) உப பிரிவு பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் பயனுள்ள உள்ளக நிருவாக முறைமை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதுடன், குறித்த முறைமையில் பயன் தொடர்பான மீளாய்வினை மேற்கொண்டு அதன்படி முறைமையை பயனுள்ளவாறு முன்னெடுப்பதற்கு தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கு கொடுக்கும் அலுவலரை அறிவுறுத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுகள் தொடர்பான அபிப்பிரயாம்

### 1.6.1 நிதிக் செயலாற்றுகை கூற்று

#### (அ) வருமானம் அல்லாத கிடைக்கப்பெறுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் முற்பணம் பி கணக்கு பொருட்டு ஆண்டில் கிடைக்கப்-பெறுதலின் மொத்தம் ரூபா. 33,894,878 ஆயினும், நிதி செயலாற்றுகை கூற்றில் குறித்த பெறுமதி ரூபா. 28,255,657 ஆக குறிப்பிடப்பட்டிருந்தமையால் முற்ப-ணம் கிடைக்கப்பெறுதலில் ரூபா.5,639,219 ஆன வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகளை தயாரிக்கும் தொடர்-ச்சியினை கவனத்த்தில் கொண்டு 2020 நிதிக் கூற்றுகளை தயாரிக்-கையில் முற்பணம் கிடைக்கப்-பெறுதலாக 215011 முற்பண மீதி-களை உள்ளடக்கி நிதிச் செயலா-ற்றுகை கூற்று தயாரிக்கப்பட்டு-ள்ளது. | திறைச்சேரி புத்தகங்-களின் பிரகாரம், அவற்றை ஒப்பிடப்பட்டு நிதிச் செயலாற்றுகை கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## (ஆ) மீண்டுவரும் செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணம் பி கணக்கிற்காக ஆண்டில் கொடுப்பனவுகளின் மொத்தம் மற்றும மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் நிதிசார் செயலாற்றுகை கூற்றின் படி முற்பணக் கொடுப்பனவுகள் 15,673,881 ஆயினும், திறைசேரி புத்தகங்களின் படி குறித்த பெறுமதி ரூபா.28,289,056 ஆகியதால் ரூபா.12,615,175 ஆன வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகளை தயாரிக்கும் தொடர்ச்சியினை கவனத்தில் கொண்டு 2020 ஆண்டின் நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் முற்பணக் கொடுப்பனவாக 215011 இன் கீழ் முற்பண மீதிகளை உள்ளடக்கி நிதி செயலாற்றுகை கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக | திறைசேரி புத்தகங்களின் படி ஒப்பிட்டு நிதிசார் செயலாற்றுகை கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிசாரா சொத்துக்களின் படிவம் மற்றும் திறைசேரி கணினி அச்சீடுகளுடன் ஒப்பிடுகை-யில் 09 சொத்துக்களின் ஆரம்ப மீதிகளில் ரூபா.273,033,160 ம், ஆண்-டில் கொள்வனவுகளுக்-கிடையில் ரூபா.221,652,126 ம், இறுதி மீதிகளுக்கிடையில் ரூபா.51,381,030 ம் என்ற வகையில் வேறுபாடுகள் காணப்பட்டன. | இந்த வேறுபாடுகளுக்கு காரணம் யாதெனில், திசெம்பர் மாதம் தலைமை அலுவலகம் மற்றும் தொழில்நுட்வியல்/தொழில்நுட்ப கல்லூரிகளால் நிலையான சொத்-துக்களை கொள்வனவு செய்தல் திசெம்பர் 31 ஆந் திகதியில் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் மூலம் கணக்கு வைத்து முடிவுறத்தல், நடைமுறையில் சிரமமாகும். | உரிய ஆண்டுக்குள் கொள்வனவு செய்யப்பட்ட நிதிசாரா எல்லா சொத்துக்களையும் கணினி நிகழ்ச்சித்திட்டத்தில் அவ்வாண்டிலயே உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். |
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் பெறுமதி ரூபா.2,000,000 ஆன பயணிகள் வாகனம் உள்ளடக்கப்படாமை காரண-மாக, நிதிக் கூற்றுகளில் அப்பெறுமதி குறைவாக கணக்கு வைக்கப்பட்டி-ருந்தது. | இந்த வாகனத்தின் மதிப்பீட்டு பெறுமதி கணக்குப் பிரிவிற்கு உறுதிப்படுத்தப்படவில்லை என்பதால், கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. | எல்லா சொத்துக்களையும் கணக்கு வைப்பதற்கு நடவடி-க்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 ஆண்டின் பொருட் மீளாய்வு அறிக்கைகளில் 2784 வகை சொத்துக்களை அகற்றல் மற்றும் விற்பனை செய்வதற்கு பரிந்துரைக்க-ப்பட்டுள்ளதுடன், குறித்த சொத்துக்கள் ரூபா.303,944 இற்கு விற்பனை செய்யப்-பட்டிருப்பினும், அவற்றுக்-கான செலவின பெறுமதி அடையாளம் காணப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்று-வதற்கு நடவடிக்கை மேன்கொன்டிருக்கவில்லை. | குறித்த சொத்துக்களை பல ஆண்டுகளுக்கு முன்னர் கொள்-வனவு செய்திருப்பதால், குறித்த சொத்துக்களின் செலவின பெறுமதி கணக்கிடுவதில் சிரமம் உள்ளது. ஆயினும், சொத்துக்களின் செலவு-களை மதிப்பீடு செய்து எதிர்வரும் காலத்தில் நிதிக் கூற்றுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | அகற்றல் மற்றும் விற்பனை செய்த சொத்துக்களின் செல-வின பெறுமதி அடை-யாளம் காணப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு தேவை-யான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | 25 தொழில்நுட்ப/தொழில் நுட்பவியல் கல்லூரிகளில் காணிகளை மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்ப-டாமை காரணமாக இந்த காணிகளில் பெறுமதி நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்-துவதற்கு முடியவில்லை. | 14 கல்லூரிகளில் காணிகளை மட்டும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய கல்லூரிகளில் காணிகளை இனிவருங் காலங்களில் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படும். | எல்லா காணிகளையும் மதிப்பீடு செய்து கண-க்கு வைப்பதற்கான நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

## 1.6.3 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் என்பன பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் சில ஆவணங்களை பராமரிக்கப்படவில்லை என்பதுடன், சில ஆவணங்களை முறையாகவும் இற்றைப்படுத்தியும் பராமரிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **பிணை ஆவணம்**<br>நிதி ஒழுங்குவிதி 891 (1) பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலர்கள் மற்-றும் ஊழியர்களின் தகவல்-கள் உள்ளடக்கிய பிணை ஆவணம் தயாரிக்கப்பட-வில்லை. | எதிர்வருங் காலத்தில் நிதி ஒழுங்கவிதி 880/891 பிரகாரம் ஊழியர் பிணை பதிவேடு பராமரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதி 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்-கள் உள்ளடங்கும் வகை-யில் பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலர்கள் தொடர்பான ஆவணம் பராமரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | **நட்டங்கள் தொடர்பான ஆவணம்**<br>நிதி ஒழுங்குவிதி 110 பிரகாரம் நட்டங்கள் தொடர்பான ஆவணங்களை பராமரிக்கப்படவில்லை | நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுவதுடன், பதிவேடு இற்றைப்படுத்தி பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | நிதி ஒழுங்குவிதி 110 இல் ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பராமரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) **வாகனங்களின் லொக் புத்தகம்** | | |
| நிதி ஒழுங்குவிதி 1645(அ) பிரகாரம் வாகனங்களின் லொக் புத்தகங்கள் பராமரிக்க-ப்படவில்லை. | பராமரிக்கப்படுவதுடன், சம்ப-ந்தப்பட்ட புத்தகங்களை இற்றைப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | பொது 267 படிவம் பிரகாரம் வாகனங்களுக்கான லொக் புத்தகங்கள் எல்லா வாகன-ங்கள் தொடர்பிலும் பராமரி-க்கப்படுதல் வேண்டும். |

## 1.6.4 கணக்கு கொடுக்கும் அலுவலரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், உள்ளக கணக்காய்வு அலுவல்களை உரியவாறு நடை-முறைப்படுத்துவதற்கு பயனுள்ள முறைமை உள்ளதாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலர் மற்றும் கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்த வேண்டு-மாயினும், குறித்த தேவைப்-பாட்டினை நிறைவேற்றப்படவில்லை. | உள்ளக கணக்காய்வுப் பிரிவு தாபித்து வகுப்பு 1 இன் கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் பணியாற்தொகுதியினரையும் இணைக்கப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் படி எல்லா பிரிவுகளையும் கணக்காய்விற்கு உட்படுத்தப்படுவதுடன், தீர்மானம் எடுப்பதற்கு தேவையான உரிய தகவல் வழங்குதலும் மேற்கொள்ளப்படுகிறது. | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி ஒழுங்குவிதி 50 ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்விற்கான ஆண்டில் மதிப்பீடுகளை செவ்வையாக திட்டமிடப்-படாமை காரணமாக நிதி ஒழுங்குவிதி 66 இன் கீழ் 14 செலவு விடயங்களில் ரூபா.81,504,354 ஆன ஒதுக்கீடு வேறு 09 செலவு தலைப்புகளுக்கு மாற்றப்பட்டிரு-ந்ததுடன், செலவு விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடு மூலம் ரூபா. 10,889,360 ஆன மேலதிக ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | தேவை மற்றும் செல்நெறி-க்கமைவாக நிதி ஒழுங்-குவிதி 66 இன் கீழ் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் திறைசேரியின் அனுமதிக்கமைவாக ஒதுக்-கீடுகளின் மாற்றங்களை மேற்கொள்ளுதல். | நிதி ஒழுங்குவிதி 50 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மையானதும் சரியா-னதுமான செலவினங்களில் மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகளை உபயோக-ப்படுத்தல் வேண்டும். |

## 2.2 வைப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 02 ஆண்டுகள் விஞ்சிய மொத்த பெறுமதி ரூபா .26,624,109 ஆன 03 கணக்கு வைப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 570 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | எஞ்சியுள்ள மீதிகளை சீராக்குவதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளை அறிவுறுத்தல். | நிதி ஒழுங்குவிதி 570 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல். |

## 2.3 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபை நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 16 அலுவலர்களது சேவைகளை முடிவுறுத்தல், சேவை வெறித்தாக்கல், ஓய்வுபெறுதல் காரணமாக 66 பேர்களிடம் அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா.3,433,197 ஆன கடன் மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை. | கடன் மீதி அறவிடுவதற்காக நினைவூட்டல்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஓய்வு பெற்ற அலுவலர்களின் கடன் ஓய்வூதிய பணிக்கொடை கிடைக்கப்பெற்றவுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். | கடன் அறவிடல் தாமதமின்றி மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2.4 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படும்.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றின் மீதி, திறைசேரியின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றின் மீதியுடன் ஒப்பிடுகையில் 16 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக ரூபா. 12,977,769 ஐ அதிகமாகவும், 30 செலவு வியடங்களுக்கு ஏற்புடையதாக ரூபா.61,499,176 ஐ குறைவாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுகள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள எல்லா பொறுப்புகளையும் சிகாஸ் நிகழ்-ச்சித்திட்டங்கள் மூலம் உள்ளட-க்குவதற்கு 2020 வரவு செலவு ஒதுக்கீடு போதுமற்றதால் திறைசேரி கடமைகள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் பொறுப்-புகள் குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளது. | ஆண்டுக்கு ஏற்புடையதான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை செவ்வையாக கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்படாத 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் 17 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக நிலவிய ரூபா.10,141,374 ஆன பொறுப்புகளை, கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் காண்பிக்கப்படவில்லை எனிலும், திறைசேரியின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நி.ஒ.விதி 115 இன் கீழ் அனுமதி பெற்றுக்கொண்டு கொடுப்பனவு-களின் பொருட்டு சமர்ப்பிக்க-ப்படாத 2019 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான வவுச்சர்களை நிதிக் கூற்றுகளில் பொறுப்பு-களாக சமர்ப்பித்தல். | செலுத்தி விடுவிக்கப்படாத எல்லா பொறுப்புகளையும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் காணபிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) நிதி ஒழுங்குவிதி 94(1) இற்கு முரணாக மீண்டுவரும் 11 செலவு விடயங்கள் மற்றும் 4 மூலதன செலவு விடயங்களில் மீதிகளை விஞ்சி ஒழுங்குமுறையில் ரூபா.15,229,922 மற்றும் ரூபா.1,774,366 ஆன பொறுப்புகளை மேற்கொள்ளப்பட்டி-ருந்தது. | தொழில்நுட்பவியல்/தொழில்நுட்ப கல்லூரிகளில் செலுத்தப்படாத பற்றுச்சீட்டுகள் இருந்தமை காரணமாக முழுமொத்த வரவு செலவு மூலம் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை விஞ்சி பொறுப்புகளை மேற்கொ-ண்டிருத்தல். | நிதி ஒழுங்குவிதி 94(1) இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2.5 வங்கி கணக்குகளை செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 09 வங்கி கணக்குகளுக்கு ஏற்புடையதாக மொத்த பெறுமதி ரூபா. 641,601 ஆன காசோலை வழங்கிய போதும், கொடுப்பனவு பொருட்டு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் விஞ்சிய 103 காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | காலம் கடந்த காசோலைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி ஒவ்வொரு பிரிவுகளிடமும் ஆலோசனை வழங்கியுள்ளதுடன், தகவல்கள் கிடைக்கப்பெற்றவுடன் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதி 396 (இ) பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) தலைமை அலுவலகத்தின் வங்கி கணக்குக்கு ஏற்புடையதாக 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு சனவரி 31 ஆந் திகதி தொடக்கம் 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா.1,160,984 ஐ அடையாளம் காணப்படாத 100 சந்தர்ப்பங்களும் மொத்தம் ரூபா.637,882 ஐ அடையாளம் காணப்படாத 64 கொடுப்பனவு சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | தகவல்கள் கிடைக்கப்பெற்றவுடன் அடையாளம் காணப்படாத கிடைக்கப்பெறல் மற்றும் கொடுப்பனவுகளை அடையாளம் காணப்பட்டு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | அடையாளம் காணப்படாத கிடைக்கப்பெறல் மற்றும் கொடுப்பனவுகளை அடையாளம் காணப்பட்டு நிதிக் கூற்றுகளில் தேவையான சீராக்குதல்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்களின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு பொருட் மீளாய்வுகளில் பரிந்துரை செய்திருந்த அகற்றப்பட வேண்டிய 3259 பொருட் வகைகளும், விற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்திருந்த 5726 பொருட் வகைகளும் தொடர்பில் செலவின பெறுமதி அடையாளம் காணப்பட்டு கணக்குகளில் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட சொத்துக்-களின் பெறுமதிகளை கணினி மூலங்களிலிருந்து அகற்றி எதிர்வருங் காலங்-களில் நிதிக் கூற்றுகளிலி-ருந்தும் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். | பொருட் மீளாய்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்-துரைகள் நடைமுறைப்ப-டுத்தல் வேண்டும். செலவின பெறுமதிகளை அடையாளம் காணப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்-றுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

### 3.2 அரசாங்க அலுவலர்களின் பிணை தொடர்பாக பணியாற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதி ஒழுங்குவிதிக் கோவையில் 880 மற்றும் 881 (i) பிரகாரம் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்றுவிக்கும் திணைக்களம் மற்றும் தொழில்நுட்ப/தொழில்நுட்பவியல் கல்-லூரிகளில் பிணை வைக்க வேண்டிய அலுவலர்களிடமிருந்து குறித்த பதவியில் நியமனம் செய்த திகதி தொடக்கம் 02 மாத காலப்பகுதிக்குள் பிணை பிணை பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமாயினும், எந்தவொரு அலுவலரிடமிருந்தும் பிணை பெற்றுக்-கொள்ளப்படவில்லை. | பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலர்கள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதி 880 பிரகாரம் பிணை ஆவணம் பராமரிக்கு-மாறு நிருவாகப் பிரிவிடம் ஆலோசனை வழங்குதல் | நிதி ஒழுங்குவிதி 880 மற்றும் 881 (i) பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

**3.3 சேதங்கள் மற்றும் நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப கல்லூரியொன்றிலிருந்த வாகனமொன்று விபத்துக்குள்ளாகியதால் ஏற்பட்டிருந்த ரூபா. 133,076 ஆன நட்டத்தை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை | சட்டத்தரணியிடம் சம்பந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நீதவான் வழக்கு அறிக்கைகள் கிடைத்தவுடன் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். | நட்டம் அவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) உரியவாறு ஒயில் மற்றும் நீர் பயன்படுத்தி ஓட்டத்தில் விடப்படாமையால் வாகனமொன்றின் என்ஜின் 2011 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆந் திகதி செயலற்றுள்ளதாக பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட-ப்பட்டிருந்தது. நிதி ஒழுங்குவிதி 104 (4) இன் கீழ் நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கை பிரகாரம் ஏற்பட்டுள்ள ரூபா. 1,737,568 ஆன நட்டத்தில் 40% ஐ சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பினும், 2021 ஆம் ஆண்டு பெப்ருவரி 19 ஆந் திகதிய கணக்காய்வு திகதி வரை குறித்த நட்டம் அறவிடுதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | என்ஜின் செயலற்று போதல் தொடர்பாக மேற்கொண்ட ஒழுக்காற்று விசாரணையின் தீர்மானத்திற்கமைவாக 2018 யூலை மாதம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் வரை மாதச் சம்பளத்தில் தவணை-யாக அறவிடப்பட்டுள்ளது.<br>அலுவலர் அமைச்சு செயலாளரிடம் மேன்முறையிடு சமர்ப்பித்துள்ளதுடன், சலுகை வழங்குவதற்காக கவனத்தில் கொள்ளுமாறு அமைச்சு செயலாளரால் ஆலோசனை வழங்குதல். | நி.ஒ. 104 (4) அறிக்கை பிரகாரம் நட்டம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| வேன் வண்டியொன்றின் பொருட்டு 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆந் திகதி ரூபா.961,908 ஐ செலவிடப்பட்டு எரிபொருள் துளை பம்பி பொருத்தியிருப்பினும், மீண்டும் 2019 மே மாதம் 28 ஆந் திகதி அதாவது 03 ஆண்டுகளுக்கு குறைந்த காலப்பகுதியில், மீண்டும் எரிபொருள் கசிவு ஏற்படுவதாக அடையாளம் காணப்பட்டிருந்தது. குறித்த கோளாரினை சரிசெய்து கொள்வதற்கு அலுவலவர்கள் நடவ-டிக்கை மேற்கொள்ளாமை காரண-மாக மேற்படி செலவினம் சிக்கன-மற்ற செலவினமாக அவதானிக்கப்-படுகிறது. | உரிய அனுமதிக்கமைவாக 2016 ஆம் ஆண்டில் பொருத்தப்பட்ட துளை பம்பி உள்நாட்டு சந்தையில் பெற்றுக்கொள்வதற்-குள்ள எரிபொருளின் பௌதீக நிலைமை மற்றும் வண்டி ஓட்டத்தில் விடப்படும் சுற்றாடல் நிலைமை என்பன காரணமாக எரிபொருள் துளை பம்பி 03 ஆண்டுகளுக்கும் குறைந்த காலப்பகுதிக்காக மீண்டும் கோளாறு காண்பிக்கப்படுவதால் எதிர் வரும் காலங்களில் குறித்த வகையிலான பழுதுபார்த்தல்-களை இடைநிறுத்தப்பட்டுள்ளது. | செலவிடப்பட்ட தொகையில் ஆகக் கூடிய பயனை பெற்றுக்கொள-வதற்கு அலுவலர்கள் பணியாற்றுதல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரியில் கடமையில் ஈடுபடுகின்ற அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் 04-29 ஆண்டுகள் இடமாற்றக் கொள்கை நடைமுறைப்-படாமை காரணமாக ஒரே இடத்தில் சேவையாற்றும் நிலை காணப்படுதல். | பதில் வழங்கப்படவில்லை. | வருடாந்த இடமாற்-றக் கொள்கை நடைமுறைப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரியில் கடந்த 05 ஆண்டு காலப்பகுதிக்குள் 49 கற்கைநெறிகளுக்கு ஏற்புடையதாக 977 மாணவர்கள் கற்கைநெறிகளை பூர்த்தி செய்யாமல் விட்டுச் சென்றிருந்தனர். | பதில் வழங்கப்படவில்லை. | கற்கைநெறிகளை விட்டுச் செல்வதற்-கான காரணங்களை கண்டறிந்து தீர்வு வழங்குதல் வேண்டும். |

## 4. மனித வளங்களின் முகாமைத்துவம்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம். | பரிந்துரை |
| --- | --- | --- |
| ------------------------- | -------------------------------- | ------------ |
| தலைமை அலுவலகம் மற்றும் 39 தொழில்நுட்ப/தொழில்நுட்பவியல் கல்விசார் மற்றும் கல்விசாராத அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி ஒழுங்குமுறையில் 1345 மற்றும் 2525 ஆனதுடன், உண்மையான பணியாற்தொகுதி ஒழுங்குமுறையில் 636 மற்றும் 1651 ஆகியதால் வெற்றிடங்கள் ஒழுங்குமுறையில் 709 மற்றும் 874 ஆகியது. அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பணி-யாற்தொகுதியில் நிலவிய வெற்-றிடங்கள் காரணமாக மீளாய்-விற்கான ஆண்டில் வெளியக விரிவுரையாளர்கள் மற்றும் வெளி-யக ஆலோசகர்கள் ஆகியோரின் சேவை பெற்றுக்கொண்டு ரூபா. .229,490,266 ஆன கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் பணியாற்றுதல் வேணடும். | அத்தியாவசியமான பதவிகளின் பொருட்டு வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |